101490

சுருக்கம்

பள்ளிக்கல்வி — அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மார்ச் 2020–இல் இடைநிலை பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை இரண்டாமாண்டிற்கு புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தி பொதுத் தேர்வுகள் நடைமுறைப்படுத்துதல் – பழைய பாடத்திட்ட முறையில் தோல்வியுற்ற மாணாக்கர்களுக்கு மார்ச் 2020, ஜுன் 2020 ஆகிய இருபருவங்களில் தேர்வுகள் எழுதிக்கொள்ள அனுமதி அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக்கல்வித் (அ.தே) துறை

அரசாணை (ப) எண்.379

நாள்: 25.09.2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி வருடம், புரட்டாசி–8

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (ப) எண்.384, பள்ளிக்கல்வித் (வி1) துறை, நாள் 16.11.2011.
2. அரசாணை (ப) எண்.431, பள்ளிக்கல்வித் (வி1) துறை, நாள் 26.12.2012.
3. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க.எண். 234157/எப்1/2018, நாள் 10.09.2019.

------

ஆணை:-

மேலே முதலாவது மற்றும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் முறையே, பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளுக்கு பாடத்திட்டம் மாறும்பொழுது பழைய பாடத்திட்டத்தில் தேர்வெழுதி தோல்வியடைந்த தேர்வர்களுக்கு, பழைய பாடத்திட்டத்திலேயே இரு பருவங்களில் தேர்வெழுத வாய்ப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மார்ச் 2020–ல் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டத்தில் பொதுத்தேர்வுகள் நடத்துவது நடைமுறைக்கு வருவதால், இடைநிலை / மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுகளை பழைய பாடத்திட்டத்தில் தேர்வெழுதி தேர்ச்சி பெறாத தேர்வர்கள் அனைவருக்கும் பழைய பாடத்திட்டத்திலேயே தேர்வுகள் நடத்திடக்கோரி மனுக்கள் பெறப்படுகின்றன எனவும் தெரிவித்து, மாணவர்களின் நலன் கருதி, மேற்கண்ட பழைய பாடத்திட்டத்தில் தேர்வெழுதி தேர்ச்சி பெறாத தேர்வர்கள் அனைவருக்கும் மார்ச் 2020 மற்றும் ஜுன் 2020 ஆகிய இரு பருவங்களில் பழைய பாடத்திட்டத்தில் பொதுத்தேர்வுகளை நடத்திடவும், அதன்பின்னர், மார்ச் 2021 பருவம் முதல் மேற்குறிப்பிட்ட தேர்வர்கள் நடைமுறையில் உள்ள பகுதி முறையில் தேர்வெழுதும் திட்டத்தின்படி, தேர்ச்சி பெறாத / வருகை புரியாத பாடங்களை மட்டும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் தேர்வெழுதிக் கொள்ள அனுமதித்தும் அரசாணை வழங்குமாறு அரசு தேர்வுகள் இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேற்காண் அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கருத்துருவினை பரிசீலித்து, அதனை ஏற்று தமிழகத்தில் நகர்புற/கிராமப்புறங்களில் இடைநிலை/மேல்நிலை முதலாமாண்டு/

Scanned by CamScanner

இரண்டாமாண்டு பொதுத்தேர்வுகளில் பழைய பாடத்தில் தேர்வெழுதி தேர்ச்சி பெறாத பள்ளி மாணவர்கள் / தனித்தேர்வர்கள் அனைவருக்கும், மார்ச் 2020 மற்றும் ஜுன் 2020 ஆகிய இருபருவங்களில் பழைய பாடத்திட்டத்தில் (600 மதிப்பெண்களுக்கு) பொதுத்தேர்வுகளை நடத்திடவும், அதன் பின்னர், மார்ச் 2021 பருவம் முதல் அவ்வாறு தேர்ச்சி பெறாத / வருகை புரியாத பாடங்களை நடைமுறையில் உள்ள பகுதி முறையில் தேர்வெழுதும் திட்டத்தின்படி புதிய பாடத்திட்டத்தின்கீழ் தேர்வுகள் எழுத அனுமதிக்க அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்:-
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை-6.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6

நகல்
மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை-9.
பள்ளிக்கல்வி துறை முதன்மைச் செயலரின் முதன்மை
முதுநிலை தனிச்செயலாளர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

ந.க. எண் : 101490 /எப்.1 / 2019, நாள் : 26.09.2019

மேற்குறிப்பு

அரசாணை (ப) எண். 379, பள்ளிக் கல்வித் (அ.தே) துறை, நாள்: 25.09.2019 – ன் நகல் தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்கு வழங்கப்படுகிறது.

ஒம். 1.10.19
இணை இயக்குநர் (பணியாளர்)

1/10/19.

பெறுநர்:
1. அனைத்து அலுவலர்கள் (அலுவலகம்)
2. அனைத்து பிரிவுகள் (அலுவலகம்)
3. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
4. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
5. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்

Scanned by CamScanner